# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • நவம்பர் 5 2022

Weekly E-paper • November 5, 2022




## ஆர் எஸ் எஸ் பேரணி நாளை என்ன நடக்கும்?

சுப.வீரபாண்டியன்

## எல்லைப் போராட்டத்தில் தி.மு.கவின் பங்களிப்பு!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## முறை செய்யும் மன்னவன் - ஸ்டாலின்!

தலையங்கம்

## அவர் ஆளுநராக நீடிக்கக் கூடாது!

சிற்பி செல்வராசு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● நவம்பர் 5 2022

Weekly E-paper ● November 5, 2022


# ஆர் எஸ் எஸ் பேரணி நாளை என்ன நடக்கும்?

**சுப.வீரபாண்டியன்**

ஒரு ஜனநாயக நாட்டில் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் எல்லாவற்றுக்கும் அனுமதி உண்டு. அவை அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆனால் ஆர் எஸ் எஸ் பேரணிக்கு மட்டும் ஏன் இத்தனை எதிர்ப்புகள்? ஏன் இத்தனை வழக்குகள்? ஏன் காவல்துறையின் இத்தனை தடைகள்?

காரணம் இருக்கிறது.

எந்த ஓர் இயக்கம் அல்லது கட்சி பேரணியை நடத்தினாலும், அந்தக் கட்சி அல்லது இயக்கத்தின் முந்தைய வரலாறு என்ன என்று பார்ப்பது இயற்கையானது!

இதற்கு முன்னால் இந்தியாவின் பல மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ் மற்றும் சங்கப் பரிவாரங்கள் நடத்திய பேரணிகள் எவ்வாறு இருந்திருக்கின்றன, அவற்றுள் எப்படிப்பட்ட வன்முறைகள் நடந்திருக்கின்றன என்பதைக் கணக்கில் கொண்டுதான், அந்த இயக்கம் நடத்தவிருக்கும் பேரணியை அனுமதிப்பார்கள்.

சங் பரிவாரங்கள் பெரும்பாலும் தங்களின் செயல்பாடுகளை மக்களிடையே மோதல் ஏற்படுத்துவதற்காகவே செய்திருக்கின்றனர் என்பதைக் கடந்த காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட செய்திகள் உறுதிப்படுத்துகின்றன! எனவேதான் ஜனநாயக சக்திகள் இந்தப் பேரணிக்கு இவ்வளவு தடைகளை விதிக்கின்றன.

எல்லாவற்றையும் மீறி இன்றைக்கு நீதிமன்றம் 44 இடங்களில், நவம்பர் 6ஆம் தேதி பேரணி நடத்த அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. கோவை, பொள்ளாச்சி. பல்லடம், நாகர்கோயில் உள்ளிட்ட ஆறு இடங்களில் மட்டுமே தடை விதித்திருக்கிறது! அங்கும் கூட இரண்டு மாதங்களுக்குப் பிறகு விண்ணப்பிக்கலாம் என்று கூறியுள்ளது.

ஆகையால் தமிழ்நாட்டில் 44 இடங்களில் நாளை நடக்கவிருக்கும் பேரணியில் கலவரங்கள் வரக்கூடுமோ என்று அச்சம்



பலரிடமும் இருக்கிறது. நீதிமன்றத்திற்கே அந்த ஐயமும் அச்சமும் இருக்கின்ற காரணத்தால்தான், பேரணியில் ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடாது, மோதல்களை ஏற்படுத்தும் வகையில் முழக்கங்களோ பாடல்களோ இருக்கக்கூடாது என்று முன் நிபந்தனை விதித்துள்ளது. வேறு எந்தக் கட்சி ஊர்வலம் அல்லது பேரணி நடத்தும் போதும் ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடாது என்று நிபந்தனை விதிக்க வேண்டிய தேவை ஏற்படுவதில்லை.

ஆர் எஸ் எஸ் மற்றும் சங்கப் பரிவாரங்களின் நோக்கம் ஒன்றே ஒன்றுதான்! கடவுள் நம்பிக்கையைப் பரப்புவதோ, இந்து மதத்தை இந்தியாவெங்கும் கொண்டு செல்வதோ அவர்களின் நோக்கம் இல்லை. இந்துக்கள் இந்துக்கள் அல்லாதார் என்று மக்களைப் பிளவுபடுத்திப் பெரும்பான்மையாக இங்கு வாழும் இந்துக்களின் வாக்குகளைப் பெற்று விட வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே நோக்கம்.

இது மதப்பற்று என்று சொல்ல முடியாது. மத அரசியல் என்றே இதனைச் சொல்ல வேண்டும்!

சரி, நாளை நடக்க இருக்கும் பேரணி எப்படி இருக்கும், என்ன விளைவுகள் ஏற்படுத்தும்?

நாளைக்கு எங்கும் கலவரங்களோ மோதல்களோ இருக்காது என்றே தோன்றுகிறது! அமைதியாகத்தான் ஊர்வலத்தை நாளை நடத்துவார்கள்!

ஆனால் அதற்குள்ளும் ஒரு உள்நோக்கம் கட்டாயம் இருக்கும். இந்த ஆண்டு அமைதியாக நடைபெற்ற பேரணிகளைச் சுட்டிக்காட்டி, அடுத்த ஆண்டு அனுமதி கேட்பார்கள். அப்போது கலவரங்கள் வெடிப்பதற்குப் பல்வேறு வகையான வாய்ப்புகள் இருக்கின்றன!

இந்த ஆண்டு ஏற்படுத்தாத கலவரங்களை ஏன் அடுத்த ஆண்டு அவர்கள் ஏற்படுத்த வேண்டும்? அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

ஒன்று இந்த ஆண்டு நடத்தப்படுகிற அமைதியான பேரணியின் மூலம், இது ஓர் அற வழி இயக்கம் என்னும் நம்பிக்கையை மக்களிடம் ஏற்படுத்தலாம். இன்னொன்று, அந்த நம்பிக்கையைப் பயன்படுத்தி, அடுத்த ஆண்டும் பேரணிக்கு அனுமதி பெற்றுக் கலவரத்தை ஏற்படுத்தலாம். அதன் மூலம் மக்களை மதத்தின் அடிப்படையில் பிரித்து, 2024ஆம் ஆண்டில் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில், இந்துக்களின் வாக்குகளைத் தாங்கள் பெற முயற்சி செய்யலாம். இவைதான் அவர்களின் நோக்கமாக இருக்கக் கூடும் என்பது என் போன்றவர்களின் கருத்தாகும்!

எப்படி இருந்தாலும் அரசும், காவல்துறையும், மக்களும் கவனமாக இருக்க வேண்டும். மதத்தின் பெயரால் மக்கள் மோதி மாண்டு போகாமல் தடுத்திட வேண்டும்.

நாட்டில் கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பது ஒவ்வொருவரின் கடமையும் உரிமையும் ஆகும்!!

## கடைசிச் செய்தி

**சற்று நேரத்திற்கு முன்னர் கிடைத்த கடைசி செய்தி. நாளை நடத்த இருந்த ஆர்.எஸ்.எஸ். பேரணியை அவர்கள், தள்ளி வைத்துள்ளதாக அறிவித்துள்ளார்கள்.**

# எல்லைப் போராட்டத்தில் தி.மு.கவின் பங்களிப்பு!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

தமிழ்நாட்டில் எதற்கெடுத்தாலும் தி.மு.கவையும், அதன் தலைவர்களையும் விமர்சிப்பதைத் திராவிட இயக்க ஒவ்வாமை கொண்டவர்கள் வழக்கமாக கொண்டுள்ளனர். அந்த வகையில் மொழி வழி மாநிலங்கள் உருவான போது நடைபெற்ற எல்லைப் போராட்டத்தில் தி.மு.க எதுவும் பங்காற்றவில்லை என்ற அவதூறு தொடர்ந்து சிலரால் பரப்பப்பட்டு வருகிறது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நிர்வாக வசதியைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்ட சென்னை மாகாணத்தில் ஹைதராபாத் நீங்கலான ஆந்திரம், மைசூர் நீங்கலான கன்னடம், கேரளத்தின் மலபார் பகுதிகள் போன்றவை இடம் பெற்றிருந்தன. இந்திய விடுதலைப் போராட்டம் வெற்றியை நெருங்கிய நேரத்தில் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் எழத் தொடங்கிவிட்டன. 1938ஆம் ஆண்டு வார்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் விடுதலைக்குப் பிறகு மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்டது. அதே ஆண்டில் தந்தை பெரியார் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்ற முழக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

திராவிட நாடு கேட்டு தீவிர அரசியலில் ஈடுபட்டிருந்த போதும், மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தீவிரமாகக் குரல் கொடுத்தது பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.க. மொழிவாரி மாநிலங்கள் அமைப்பதுடன், சென்னை மாகாணத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சூட்ட வேண்டும் என்று தி.மு.க தொடர்ந்து குரல் எழுப்பி வந்தது.




“நேரடியாக எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டது மட்டுமின்றி, எல்லைப் போராட்டத் தியாகிகளைப் போற்றி மதித்து மரியாதை அளித்தது பின்னாளில் அமைந்த தி.மு.க அரசு. அத்துடன் நம் தமிழ் நிலத்திற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது. இவ்வாறு எல்லைப் போராட்டத்தில் தீரமுடன் ஈடுபட்ட தி.மு.கவின் தியாகத்தை மறைத்து வன்மம் பரப்பும் சூது மதியாளர்கள் இன்றும் உள்ளனர்.”

தமிழ்நாட்டின் பகுதிகளை உள்ளடக்கிய சித்தூர் மாவட்டத்தை ஆந்திரத்துடன் இணைத்ததை எதிர்த்து தி.மு.க, தமிழரசு கழகத்துடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டதன் விளைவாக 1960ஆம் ஆண்டு ஆந்திர மாநிலத்தில் இருந்து திருத்தணி மீட்கப்பட்டது. இதற்காக சித்தூர் மாவட்ட தி.மு.கவினர் ரயில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய இந்தியப் பிரதமர் நேரு போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் முட்டாள்கள் (Non Sense) என்று கண்டித்தார். போராட்டத்தில் ஈடுபடும் மக்களை இழிவுபடுத்திய பிரதமர் நேருவைக் கண்டித்துத் தி.மு.க தமிழகம் தழுவிய அளவில் மும்முனைப் போராட்டம் நடத்தியது.

தெற்கெல்லைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு வந்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் இயக்கத்திற்குக் கலைவாணர் என். எஸ்.கிருஷ்ணன் நிதியுதவி அளித்து ஆதரித்தார்.

நேரடியாக எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டது மட்டுமின்றி, எல்லைப் போராட்டத் தியாகிகளைப் போற்றி மதித்து மரியாதை அளித்தது பின்னாளில் அமைந்த தி.மு.க அரசு. அத்துடன் நம் தமிழ் நிலத்திற்கு “தமிழ்நாடு” என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது. இவ்வாறு எல்லை போராட்டத்தில் தீரமுடன் ஈடுபட்ட தி.மு.கவின் தியாகத்தை மறைத்து வன்மம் பரப்பும் சூது மதியாளர்கள் இன்றும் உள்ளனர். ஆரிய சூழ்ச்சிக்குப் பலியான அவர்கள் ஈழம், கச்சத்தீவு, காவிரி நீர் பங்கீடு என்று தொடர்ந்து தி.மு.கவைக் குறி வைத்து குறை கூறிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களின் அவதூறுகளைத் தாண்டி, அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல் “அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி”யை முன் வைத்து திராவிட மாடல் ஆட்சி தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

திராவிடத்தின் நிழல் படாமல், தமிழக வரலாறு எழுத முடியாது!



## ஈரோடு, பேரவைக் கலந்துரையாடல்




ஈரோடு பெரியார் மன்றத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் கலந்துரையாடல் கூட்டம் 30-10-2022 அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஈரோடு மாநகர மாவட்டத் தலைவர் சேகர் தலைமை தாங்கினார். பேரவைப் பொறுப்பாளர்கள் தமிழ்க்குமரன், சரவணப் பெருமாள், ஆனந்தராஜ், முருகன், நவீன், கபிலன், சுந்தரமூர்த்தி உள்ளிட்டத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை, நட்புக் கழகம்



சென்னை திராவிட நட்புக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 31-10-2022 அன்று, பேரவைத் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்ட நிகழ்விற்குத் திராவிட நட்புக் கழக மாநிலத் தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆ.சிங்கராயர் தலைமை தாங்கினார். வழக்கறிஞர் இளஞ்சித்திரன் உள்பட நட்புக் கழக ஏனைய தோழர்களும் கலந்து கொண்டனர்.




# அவர் ஆளுநராக நீடிக்கக் கூடாது!

**சிற்பி செல்வராசு**

“ஆட்டுக்குத் தாடி...” என்று பேரறிஞர் அண்ணா சொன்னது போல், ஒன்றிய அரசால் தமிழ்நாட்டின் ஆளுநராக ஆர்.என்.ரவி அமர்த்தப்பட்டு இருக்கிறார்.

இவர் வகிக்கும் பொறுப்புக்குச் சிறிதும் சம்பந்தமில்லாமல், தான் உறுதியேற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தின் காப்புறுதிக்கு மாறாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். தமிழ்நாடு அரசுக்கும், மக்களுக்கும் ஊறு விளைவிக்கின்ற வகையில், மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் பேசிக் கொண்டு இருக்கிறார்.

இந்தியாவின் பழைமையான தர்மம் சனாதன தர்மம், அது நிலைபெற வேண்டும் என்பன போன்ற அவரின் பேச்சு ‘சாதி’யை நோக்கியதாக இருக்கிறது.

இந்துசனாதனம் இந்திய ஒன்றியத்தின் கலாச்சாரம் என்றும், இடையில் தோன்றிய திராவிடம் என்பது வெறும் மாயை என்றும் அவர் ஓர் அரசியல்வாதியைப் போலப் பேசுவது பிதற்றலாக இருக்கிறது.

தெளிந்த மனிதத்தைப் பேசும் பகுத்தறிவு நூலான திருக்குறளைப் பிடித்துக் கொண்டு அதை ஆன்மீக நூலென்று பேசுவதும், அதற்குக் காவிச் சாயம் பூசுவதும் ஆளுநர் ரவிக்குத் தேவையில்லாத வேலை.

மேலும், உலகில் இருக்கக்கூடிய ஒவ்வொரு நாடும் மதம் சார்ந்த நாடாகத்தான் இருக்க முடியும் என்ற ஆளுநரின் பேச்சு, இந்திய ஒன்றியத்தை இந்துமத நாடாகக் காட்ட அவர் முயல்கிறார் என்பதை உறுதி செய்கிறது. இது அரசியல் சட்டத்திற்கு முரணானது. எந்த ஒரு மதத்தையும் சாராத நாடு இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றும் பேசுகிறார் அவர். இந்திய ஒன்றியம் மதச்சார்பற்ற நாடு என்பதை மறந்து பேசிக் கொண்டு இருக்கிறார்.

190க்கும் மேற்பட்ட நாடுகள் இருக்கும் இந்தப் பூமிப் பந்தில், வெறும் முப்பது நாடுகள் மட்டுமே மதச்சார்பு உடையவையாக இருக்கின்றன. மற்றவை எல்லாம் மதச்சார்பற்ற நாடுகளாக இருக்கின்றன. உண்மை இவ்வாறு இருக்க, இந்திய ஒன்றியத்தை இந்துமத நாடாக அடையாளம் காட்ட ஆளுநர் ரவி முயல்வது அத்துமீறலாக இருக்கிறது.

ஓர் ஆளுநர், தான் வகிக்கின்ற பொறுப்புக்கு அப்பாற்பட்டு ஒரு சராசரி அரசியல்வாதியைப் போலப் பேசினால் அவர் ஆளுநராக நீடிக்கத் தகுதி அற்றவர் ஆகிறார்.

அண்மையில் கோவை மாநகரில் கார் சிலிண்டர் வெடிப்பு நிகழ்ந்த போது மாண்புமிகு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு எடுத்த உடனடி நடவடிக்கை, துப்புத் துலக்கிய காவல்துறையின் வேகமான செயல்பாடு என்ன என்பதை நாடே பார்த்துக் கொண்டு இருக்கிறது.

வழக்கின் தீவிரத் தன்மையை கருத்தில் கொண்ட அரசு, தேசியப் புலனாய்வு முகமை இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று அடுத்த நான்கு நாள்களுக்குள் ஒப்படைத்தது. உடனே ஆளுநர் ரவி ஏன் இந்தத் தாமதம் என்று ‘குரல்’ எழுப்புகிறார். ஆளுநர், தமிழக அரசின் எத்தனை மசோதாக்களைக் கையொப்பமிடாமல் “தாமதப்படுத்தி” வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு மாறாகவும், மக்களிடையே சனாதன மதக் கருத்துகளை விதைப்பதும், மக்களிடையே வேற்றுமைகளை உருவாக்கப் பேசுவதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைச் சரியாகச் செயல்பட விடாமல் மசோதாக்களை முடக்கி வைப்பதுமான வேலைகளைச் செய்யும் ஆளுநர் ஆர்.என்.ரவி இனியும் பதவியில் நீடிப்பது ஏற்புடையதல்ல.

தி.மு.கழகம் உள்படத் தமிழக (அ.தி.மு.க / பா.ஜ.க நீங்கலாக) கட்சிகள், ஆளுநர் ரவியை நீக்க எடுக்கும் முயற்சி மிகச் சரியானது.

ஒன்றிய அரசே! ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறு!!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## முறை செய்யும் மன்னவன் - ஸ்டாலின்!

**மா**மழையைப் போற்ற வேண்டும் என்கிறார் இளங்கோவடிகளார்.

கெடுப்பதுவும், கொடுப்பதுவும் என்ற இரண்டையும் மழையே செய்யும் என்று சுட்டிக் காட்டுகிறார் வள்ளுவர். அனுபவத்தால் இவ்விரண்டையும் மக்கள் அறிவார்கள்.

கடந்த அ.தி.மு.க ஆட்சிக் காலங்களில் பெய்த பருவமழையில் ஆறுகள் பெருக்கெடுத்தன. ஏரி, குளங்கள் எல்லாம் நீர் நிறைந்து வெள்ளம் பெருக்கெடுத்து வீடுகளுக்குள் புகுந்தது. தெருக்கள், நகரமெல்லாம் வெள்ளம், வெள்ளம்! பல நாள்கள் வெள்ளம் வடிய வழியில்லாமல் விழிபிதுங்கிப் போனார்கள் மக்கள். 2015ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில் முன் திட்டமில்லாமல் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்ததன் விளைவாக ஏற்பட்ட பாதிப்புகளை மக்கள் மறக்கவில்லை.

2022, இப்போது, வடகிழக்குப் பருவமழை தொடக்கத்திலேயே பெருங்கனமழையாகக் கொட்டியது.

ஆனால் முன்னிருந்த அவலம், பாதிப்பு இப்போது மக்களுக்கு இல்லை. முதல்வர் ஸ்டாலின் அவர்களின் தேர்ந்த ஆட்சியில், தெளிவான வழிகாட்டுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால் அடையாறு, ஆறு அகலப்படுத்தித் தூர்எடுத்து வெள்ளம் போக வழிகளைச் செய்தனர் அதிகாரிகள்.


மைய நகரங்கள் உள்படப் பரவலாக நீர் தேங்காமல் வடிகால் வழியாகச் செல்ல செம்மையான நீர்வடிகால் பணிகளை முன்கூட்டிச் செய்து முடித்தது தமிழக அரசு இயந்திரம்.

இதன் விளைவால் வெள்ளப் பாதிப்பில் இருந்து மீண்ட மக்கள், தப்பித்த மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள்.

எடப்பாடி, ஜெயக்குமார் போன்ற அ.தி.மு.கவினர் தங்களின் 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் எந்தப் பணிகளையும் செய்யாமல் பொழுது போக்கிவிட்டு இப்போது, வடிந்த நீரைப் பார்த்து வடியவில்லை என்கிறார்கள், இல்லாத வெள்ளத்தை இருக்கிறது என்று கதறுகிறார்கள். பா.ஜ.க இது குறித்து மூச்சு கூட விடவில்லை. பாவம், வேறு என்னதான் செய்வார்கள் அவர்கள்.

காலம் அறிந்து, தேவை அறிந்து, மக்களுக்கு வேண்டியவைகளை முறை செய்யும் ஆட்சியாளர் இணையில்லாத் தலைவராகின்றார்.

அத்தகையத் தலைவர், நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் என்பதை, அவரின் இம்மழைக்காலத்திற்கு உரிய செயல்பாடுகள், உறுதி செய்கின்றன, வாழ்த்துவோம்.




## பேராசிரியர் க.நெடுஞ்செழியன் காலமானார்



தமிழின் தொன்மை, ஆசீவகம், சமூகநீதி ஆகியத் தளங்களில் துறைபோகிய ஆளுமை கொண்டவர் பேராசிரியர் க.நெடுஞ்செழியனார். பேராசிரியர் நெடுஞ்செழியன், அவரது இணையர் சக்குபாய் நெடுஞ்செழியன் இருவரும் திராவிடர் கழக, பகுத்தறிவாளர் கழக மேடைகளில் திராவிட இயக்கக் கருத்துகளையும், பெரியாரியல் கருத்துகளையும், பரப்புரை செய்து வந்தவர்கள். இருவரும் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள். அவர்களது ஒரே மகன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில பங்கேற்கச் சென்றார், பின் அவரைப் பற்றிய எந்தத் தகவலும் இல்லை.

முத்தமிழ் அறிஞர் கலைஞரிடத்திலும் இனமான பேராசிரியரிடத்திலும் பேரன்பும், நட்பும் கொண்டிருந்தார்.

பழந்தமிழ் நாட்டில் நிலவிய பகுத்தறிவான ஆசிவக மதம் பற்றி ஆய்வு செய்து, அவர் எழுதிய நூல்கள் சிறந்த ஆசிவக நூல்கள் ஆகும்.

அவர் மீது அவருக்கு எள்ளளவும், எள்ளின் முனையளவும் தொடர்பில்லாத பெங்களூர் பிளேசர் டவுன் வெடிகுண்டு வழக்கில் அவர் கைது செய்யப்பட்டு சுமார் மூன்றரை ஆண்டுகள் பெங்களூரு சிறையில் வாடினார். அவர் சிறையில் இருந்த காலத்தில் கர்நாடகா முதலமைச்சர்களாக எஸ் எம் கிருஷ்ணா, தேவே கவுடா , தரம்வீர் சிங் ஆகிய மூவர் மாறி இருந்தனர். அவரைப் பிணையில் வெளிக் கொண்டு வர அண்ணன் தஞ்சை ரத்தனகிரி அவர்களோடு நானும் மேற்கொண்ட முயற்சிகள் மறக்க இயலாதவை.

அந்த வழக்கின் காரணமாக அவருக்குக் கிடைக்க வேண்டிய பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பு கிடைக்காமல் போனது. தமிழ்ச் செம்மொழி உயராய்வு மையத்தில் அவருடைய பணிகள் மறக்க இயலாதவை. தமிழ் இலக்கியத்தில் அவர் ஆற்றிய பணிகளுக்காக கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் ஆய்வு விருது (2021) அவருக்கு வழங்கப்பட்டது. அதுவே அவர் வாழ்நாளில் இறுதியாகப் பெற்ற விருதாகும். உடல்நலமின்றி சிகிச்சை பெற்று வந்த அவரைப் பேராசிரியர்.சுப.வீரபாண்டியன் அவர்களோடு காணச் சென்ற நேரத்தில், அவரும் அவரது துணைவியார் சக்குபாய் அவர்களும் கம்பராமாயணம் குறித்து கொடுத்த விளக்கங்கள் மகத்தானவை.

கடந்த ஆறு மாதங்களாக பல்வேறு சிகிச்சை பெற்று வந்த அவர் 4-11-2022 அன்று தன் ஆய்வுகள் அனைத்தையும் நிறுத்தி நிரந்தர ஓய்வு பெற்றார். பேரா.நெடுஞ்செழியன் அவர்களின் வாழ்விணையர் பேரா.சக்குபாய், மகள்கள் நகைமுத்து, குறிஞ்சி உள்ளிட்ட குடும்ப உறவுகளுக்கும் , நட்புகளுக்கும், இலக்கியத் தோழமைகளுக்கும் கருஞ்சட்டைத் தமிழர் ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்கிக் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது

**பொள்ளாச்சி மா. உமாபதி**
அவைத் துணைத் தலைவர்,
திராவிட இயக்கத் தமிழர் பேரவை.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408